# வள்ளலார் உணர்த்தும் மனித உரிமைப் பண்பாடு

**முனைவர் கோ.ப. நல்லசிவம்**
**தலைவர், மெய்யியல் துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

1

**ஆய்வுச் சுருக்கம்**

மனித உரிமைகள் என்று பெரிதும் வலியுறுத்திப் பேசப்பட்டு வரும் இக்காலச் சூழலில் நம் முன்னோர்கள் மனித மாண்பை, விழுமியங்களை எவ்வாறெல்லாம் போற்றிப் பாதுகாத்துள்ளனர் என்பதை ஆய்வு செய்வதும் பரப்புவதும் காலத்தின் தேவையாக உள்ளன. நம்முடைய தமிழ் இலக்கியங்கள் ஆதி காலந்தொட்டே மனித மாண்பைப் பெரிதும் மதித்துக் கடைபிடித்துள்ளன. அவ்வகையில் வாழையடி வாழையாக வந்த தமிழ் மரபில் வள்ளலார் கொள்கைகள் மனித உரிமை என்ற பெயரில் அறியப் படாவிட்டாலும் அவர்தம் பாடற்பொருண்மையை நுண்ணிதின் ஆராயும் போது இன்று சட்டங்களாகவும், வழிமுறைகளாகவும் உள்ள பல கோட்பாடுகள் அவர்தம் பாடல்களோடு நெருங்கியிருத்தலை உணரமுடிகிறது. அவ்வகையில் வள்ளலார் பாடல்களில் காணப்படும் மனித உரிமைப் பண்பாடு தொடர்பான கோட்பாடுகளை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

மனித உரிமைப் பண்பாடு, ஆன்மநேய ஒருமைப்பாடு, சமரச சுத்த சன்மார்க்கம், மனிதப் பண்பாடு, மனித உரிமைச் சட்டம், தீண்டாமை, நால்வருணம், ஆசாரம், ஜீவகாருண்யம்.

**முன்னுரை**

மனித உரிமைகள் என்று பார்க்கும் போது முதற்கண் மனிதர்கள் அனைவரும் சமம் என்னும் கோட்டைப்பாட்டையே சட்டம் வலியுறுத்துகிறது. அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14 இன் படி குடிமக்கள் யாவரும் சட்டத்தின் முன் சமம். அனைத்துக் குடிமக்களுக்கும் சட்டங்களின் சமன்மையான காப்பளிப்பை (Equal Protection under law) யாரும் மறுக்க முடியாது. மேலும் சட்டப்பிரிவு 15(1) இன்படி சமயம், இனம், குலம், பாலினம், பிறப்பிடம் ஆகிய எந்தக் காரணத்தை முன்னிட்டும் குடிமக்கள் எவருக்கும் எதிராக வேற்றுமை பாராட்டுதல் ஆகாது என்பதும் பெறப்படுகிறது. சட்டப்பிரிவு 15(2) இன்படி மேற்குறிப்பிட்ட காரணங்கள் எதனையும் காட்டிக் குடிமக்கள் எவருக்கும் பொது இடங்களில் நுழைய மறுப்பதோ, தகுதியின்மை எனச் சுட்டுவதோ (disability),கடப்பாடு(Liability),வரையறை (Restriction), கட்டுப்பாடுகள்(Condition) போன்றவை விதிப்பதோ செய்யலாகாது என்பதை வலியுறுத்துகிறது. இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கும் போது வள்ளலார் பாடல்கள் எத்துணை எதிர்காலச் சிந்தனையோடு திகழ்கிறது என்பது புலனாகிறது.

**மனிதர்கள் அனைவரும் சமம்**

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று இந்திய அரசியலமைப்புச் சாசனம் சொல்கிறது. இதனை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். மனிதர்கள் மட்டுமல்லது அனைத்து உயிர்களும் சமம் என்று நினைத்த பண்பாடு நம்முடையது என்றால் அது மிகையாகாது. வள்ளலார் கண்ட ஆன்ம

நேய ஒருமைப்பாடு நமக்கு அதனைத் தெளிவாக்குகிறது. சாதி, சமயம், மதம், சாத்திரம் ஆகிய அனைத்து வேறுபாடுகளையும் வள்ளலார் கடுமையாகக் கண்டிக்கிறார், எதிர்க்கிறார். சான்றுகளாக,

**இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை**
**இருவாய்ப்புப் புன் செயில் எருவாக்கிப் போட்டு**
**மருட்சாதி சமயங்கள் மதங்களாச்சிரம**
**வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டு...**[1]

**நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா**
**நவின்ற கலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளையாட்டே**
**மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ**
**விழித்திதுபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே.**[2]
**சாதியும் மதமும் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி** [3]

என்ற அருட்பா வரிகளால் தெளிவாக உணரமுடிகிறது. வள்ளலரார் கண்ட மனித உரிமைப் பண்பாடு என்பதை ஒரே பாடலாகச் சுருக்கிச் சொல்ல வேண்டும் என்றால்,

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர் அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம் எனத்தெரிந்தேன்...**[4]

ஆகும். இப்பாடலில் இடம்பெறும் எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல், ஒத்துரிமை ஆகிய சொற்கள் மேற்குறிப்பிட்ட அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் 14 மற்றும் 15 ஆகியவற்றின் அடிப்படையாகவே அமைந்துள்ளமையை உணரலாம். இதில் இடம்பெறும் ஒத்துரிமை என்பதை விரிக்கின், மனித உரிமைகள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானது என்பதும், அதனைத் துய்க்க அனைவருக்கும் சம வாய்ப்பு உள்ளது என்பதும், மறுப்பதற்கோ, தடுப்பதற்கோ யாருக்கும் உரிமையில்லை என்பதும் பெறப்படும். இதனையே சமசர சுத்த சன்மார்க்கம் என்றும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுப் பிரகடனம் என்றும் வள்ளலார் தெரிவிக்கின்றார். மோட்சம் என்னும் வீடுபேறடைய பல சமயங்கள் பல்வேறு வழிகளைக் குறிப்பிட்ட நிலையில் வள்ளலார் மட்டுமே உயிரிரக்கமாகிய ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்று அறிவுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வள்ளலார் கண்ட மனித உரிமைப் பண்பாடும் தீண்டாமை ஒழிப்பும்**

அரசியல் சாசனப் பிரிவு 17 இன் படி தீண்டாமை முற்றிலுமாக ஒழிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தீண்டாமை கொள்வது மனித உரிமை மீறிய செயலாகவும், தண்டனைக்குரிய குற்றமாகவும் உள்ளது. சாதியால் ஒருவரை உயர்வு தாழ்வு பார்ப்பதை வள்ளலார் அளவிற்கு இத்தமிழ்

மண்ணில் கண்டித்தவரைக் காணலாகாது. அவர்தம் பல பாடல்கள் நேரிடையாகச் சாதியத்தை அடியோடு தகர்க்கிறது. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான் என்னும் தத்துவத் தந்தை வள்ளுவரின் ஆன்ம நேயத்தை வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையாக வளர்த்தெடுத்தார் எனலாம். உலகத்தில் ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் என்ற வேறுபாடுகள் அற்று அனைவரும் ஒன்றிணைந்து வாழ்வதே சமரச சுத்த சன்மார்க்கம் என்றார் வள்ளலார். இன்று வர்க்க பேதம், வருண பேதம், நிற பேதம், பாலின பேதம், வருமான பேதம் என்றெல்லாம் மக்களைப் பிரிப்பதை அன்றே வள்ளாலார் கண்டித்திருக்கிறார் என்பதை நோக்கு பொழுது வியப்பாயுளது. சான்றாக,

**ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும்**
**ஒருமை உளர் ஆகி உலகியல் நடத்தல் வேண்டும்** [5]

எனவரும் அருட்பா வரிகளைக் காட்டலாம்.

**வாழ்வுரிமைப் பண்பாடும் அரசும்**

வாழ்வுரிமை என்பது ஒருவர் உயிரோடு வாழ்வதற்கான உரிமை மட்டுமன்று. வாழ்க்கைத் தரத்துடன் வாழ்வது என்பதாகப் பொருள் கொள்ள வேண்டும் என்று மனித உரிமைகள் குறித்த சட்டம் சொல்கிறது. ஒருமனிதன் வாழ்க்கைத் தரத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கேற்ற அனைத்து நிலைகளையும் ஒரு அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மனித உரிமைகளின் சட்டப்பிரிவுகள் வலியுறுத்துகின்றன. குறிப்பாக சட்டப்பிரிவுகள் 21, 19(1), 38(2) ஆகியன மேற்சொன்ன உரிமைகளைப் பெறுவதற்கு ஒரு மனிதனுக்கு முழுச்சுதந்திரமும் அவற்றைச் செய்து தருவது அவ்வரசின் கடமை என்பதையும் தெளிவுபடுத்துகிறது. வள்ளலார் இப்படிப்பட்ட அரசையே விரும்புகிறார். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும் எனும் தமிழ்மா மறையும் இதனையே பறைசாற்றும். மேற்சொன்ன உரிமைகளைத் தராத அல்லது மறுக்கும் அரசு கருணையில்லாத அரசு என்றும் அவ்வரசு மாற்றப்பட- ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார் வள்ளலார்.

**அச்சந் தவிர்த்தே அருளிற் செலுத்துகின்ற**
**விச்சை அரசே விளங்கிடுக – நச்சரவம்**
**ஆதிக் கொடிய உயிர் அத்தனையும் போய்ஒழிக**
**நீதிக் கொடிவிளங்க நீண்டு.**[6]
**கருணையில் ஆட்சி கடுகி ஒழிக**
**அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க – தெருள்நயந்த**
**நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்து**
**எல்லோரும் வாழ்க இசைந்து.**[7]

என்ற பாடல்கள் வழி எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கின்ற உரிமை வாய்ந்த வாழ்க்கை வேண்டும் என்பதும், சுரண்டல்கள், ஊழல்கள் தடுக்கப்பெற வேண்டும் என்பதும், இவைபோன்ற அச்சங்களைத் தவிர்த்து நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்க்கைத் தரத்திற்கான உத்திரவாதத்தை ஒரு அரசு

மக்களுக்குத் தர வேண்டும் என்பதும் வள்ளலார் விழைவாக இருப்பதைக் காணலாம்.

**மனித உரிமைப் பண்பாட்டில் பெண்ணுரிமை**

மனித உரிமைகளில் அதிக கவனம் பெறுவது பெண்களுக்கான உரிமைகள். அரசியலமைப்புச் சாசனத்தின் படி சமூகத்தில் ஆண், பெண் என்ற பாலினப் பாகுபாடுகள் இல்லை. வாழ் உரிமை மற்றும் அனைத்தையும் பெறம் உரிமை பெண்களுக்கு உண்டு என்பதையும் சட்டம் உறுதி செய்கிறது. ஒரே வேலைக்கான ஒரே ஊதியம் தொடங்கி ,அனைத்திலும் பெண்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. திருமணம், சொத்து, தனிப்பட்ட விருப்பங்கள் ஆகிய அனைத்து நிலைகளிலும் பெண்கள் சுய விருப்பம் சார்ந்து முடிவெடுத்தலை சட்டம் உரிமையாகக் குறிப்பிட்டுள்ளது. சான்றாக 38(அ),39(ஈ) ஆகிய சட்டப்பிரிவுகளைக் குறிக்கலாம்.

பெண்களுக்கான உரிமைகள் அவர்கள் மனம் சார்ந்து அமைய வேண்டும் என்ற கொள்கையிலும், அவர்கள் மீது எந்தவிதமான திணிப்பும் சமூகம் சார்ந்தோ அல்லது பொருளாதாரம் சார்ந்தோ நிகழக்கூடாது என்ற எண்ணத்திலும் வள்ளலாருக்கு ஆழ்ந்த பிடிப்பு உண்டு என்பதை அவர்தம் உரைநடைப்பகுதிகள் மற்றும் உபதேசப்பகுதிகள் மூலம் உணர முடிகிறது. விதவை எனும் பெண்களின் கொடுமையான நிலையை முதன்முதலில் எதிர்த்துக் குரல் கொடுத்தவர் வள்ளலார். விதவைகள் எனும் கைம்பெண்கள் கணவனை இழந்த காரணத்தால் தாலி, பொட்டு, பூ ஆகியவற்றைத் துறத்தலும், வெள்ளாடை உடுத்தியும் இருக்க வேண்டும் என்பதும், சமூகத்தால் ஒதுக்கப்பட்ட இனமாகவும் இருந்த சூழலில் வள்ளலார் இதனை மிகப்பெரும் உரிமை மீறலாகவே பார்க்கிறார். கணவன் இறந்தால் பெண் தாலி இழக்க வேண்டாம் என்றும் பொட்டு, பூ ஆகியவற்றைத் துறக்க வேண்டாம் என்றும் துணிவுடன் குறிப்பிடுகிறார் வள்ளலார்(புரட்சித் துறவி வள்ளலார் – ஊரன் அடிகள்).

**மக்களின் பண்பாடும் கடமைகளும்**

ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கு எந்தளவிற்கு உரிமையுள்ளதோ அதே அளவிற்குக் கடமைகளும் உள்ளன என்பதையும் அரசியலமைப்புச்சட்டம் வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக 1976ல் நாற்பத்திரண்டாவது அரசியல் சட்டத்திருத்தத்தில் இக்கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கடமைகளுள் சமயம், மொழி, மதம், இனம், பகுதிகள் கடந்த ஒத்திசைவுடன் பொதுமை, உடன்பிறப்புணர்வு ஆகியவற்றை ஒவ்வொரு குடிமகனும் பேணிப் பாதுக்காக்க வேண்டும் என்பதாகும். இக்கடமை குறித்த சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 51அ(அ) முதல்51அ(ஐ) வரை இடம் பெறுகின்றன. இதனை வள்ளலார் சமய, மத, இன சமரசமாகவே குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முதன் முதலில் சமயசமரசம் பேசியவர் வள்ளலார் ஆவார். சான்றுகளாக,

**எம்மத நிலையும் நின்னருள் நிலையில்**
**இலங்குதல் அறிந்தனன் எல்லாம்**
**சம்மதம் ஆக்கிக் கொள்கின்றேன் அல்லால்**
**தனித்து வேறு எண்ணிய துண்டோ…**[8]

**அருகர் புத்தர் ஆதி என்பேன் அயன் என்பேன் நாரா**
**யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்**
**பருகு சதாசிவம் என்பேன் சத்திசிவம் என்பேன்**
**பரமம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்** [9]

எனவரும் பாடலடிகளைக் காட்டலாம். எனவே வள்ளலாரின் சமரசசுத்த சன்மார்க்கம் என்பது சாதி, மதம், இனம், குலம், பாலினம், நாடு எல்லாவற்றையும் கடந்து ஆன்ம நேயத்தால் ஒன்றிணைத்தலாகும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஒத்துரிமை உடையவராய் உவக்கும் வள்ளலார் உரிமைகளை மட்டுமல்லாமல் மக்களின் கடமைகள் குறித்தும் அன்றே எண்ணியிருப்பது ஈண்டு சிந்திக்கத்தக்கது.

**நிறைவாக…**

மனித உரிமைகள் குறித்து இன்று அதிகமாகப் பேசும் நாம் அவற்றின் முக்கியத்துவத்தை, தேவையை வலியுறுத்தும் போது அனைத்தும் வெளிநாட்டினரின் தத்துவங்கள், புத்தகங்கள் மூலமாகவே விளக்குகின்ற போக்கை அதிகமாகப் பார்க்க முடிகிறது. வெளிநாட்டினரின் அறிவை, ஆற்றலை மதிக்கும் நாம் நம்முடைய தமிழ்ச்சமுதாயத்தில், இந்தியத் தத்துவத்தில் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே இது குறித்துச் சிந்தித்துள்ளனர் என்பதைப் பறைசாற்ற மறுக்கிறோம் அல்லது மறந்து விடுகிறோம். இவ்வரிசையில் வள்ளலார் மட்டுமல்ல சங்க இலக்கியங்கள், திருக்குறள் தொடங்கி நம்முடைய அனைத்து அறிவுச்செல்வமாக உள்ள புத்தகங்களும் மனித உரிமைகள் மற்றும் கடமைகளை ஆழமாகவும் அகலமாகவும் நுணுக்கமாகவும் பதிவு செய்துள்ளன.

சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், பண்பாடுகளைப் பாதுகாத்தல், நாட்டுப்பற்று, மொழிப்பற்று என எல்லா நிலைகளிலும் நம்முடைய இலக்கியங்கள் செம்மார்ந்துள்ளன. பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றுகின்ற தன்மையும், மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர் என்கிற பாடமும், உயிரெலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான் என்று மன்னனுக்கு இலக்கணம் கூறும் கம்பராமாயணமும், மாநிலங்காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலை தானதனுக்கு இடையூறு தன்னால் தன்பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால் கள்ளவரால் உயிர்தம்மால் ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ என்கிற பெரியபுராண ஆட்சியாளரும் நம் கண்முன் தமிழரின் மனித உரிமைக் கொள்கைகளைக் காட்டுகிறது. இதனைத் தக்கவாறு தக்க இடத்தில் ஆய்வு செய்து மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியது அனைத்து தமிழர்களின் கடமையாகும்.

**மேற்கோள்கள்**

1. திருவருட்பா, பா.எ. 4654
2. திருவருட்பா, பா.எ. 4174
3. திருவருட்பா, பா.எ. 4615
4. திருவருட்பா, பா.எ. 5297
5. திருவருட்பா, பா.எ. 4082

**துணைநூல்கள்**

1. திருவருட்பா , வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. புரட்சித் துறவி வள்ளலார் , ஊரன் அடிகளார், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர்
3. மனித உரிமைகள், பேரா. இராஜமுத்திருளாண்டி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2008

6. திருவருட்பா, பா.எ. 6.72.4
7. திருவருட்பா, பா.எ. 6.72.5
8. திருவருட்பா, பா.எ. 3639
9. திருவருட்பா, பா.எ. 3640

4. இந்திய அரசியலமைப்புச் சட்டம், புலமை வேங்கடாசலம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2008